ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி கூ.	பிரஜோத்பத்தி௵ மாசி௴	பகுதி உ.
Vol. 9.	February & March 1932.	**No. 2.**

ஸத்ஸம்ப்ரதாயம்.*

உலகத்தில் ஒன்றோடொன்று பிணங்குகின்ற எத்தனையோ சமயங்கள் உலாவுகின்றன. இங்ஙனம் உலாவுகின்ற சமயங்களை இரண்டு பெரும்பிரிவாகப் பிரிக்கலாம். அவை: வேதத்தை ஒப்புக்கொண்ட சமயம், வேதபாஹ்யசமயமென்பன. இவற்றுள் வேதத்தை அங்கீகரித்த சமயம் சாங்கியம், பாதஞ்சலம், நையாயிகம், வைசேஷிகம், கௌமாரிலாதிசமயம், ஔபநிஷதமென்று ஆறுவகையாக வழங்கப்பெறும். வேதபாஹ்யசமயமும் சார்வாகம், ஜைநம், யோகாசாரம், மாத்யமிகம், வைபாஷிகம், ஸௌத்திராந்திகம், என்று ஆறுவகையாக வழங்கப்பெறும். ஔபநிஷத சமயம் அத்வைதம், த்வைதம், விசிஷ்டாத்வைதம் என்று மூவகையினவாம். இந்த மூன்று சமயத்தை மேற்கொண்டவர்கள் தத்தம சமய உண்மை, முறையே "[illegible]" என்றும், "[illegible]" என்றும், "[illegible]"

* இவ்விஷயம், 6—2—32உயில் மதுரை 'ஸத்ஸம்ப்ரதாய ஸபை'யின் ஆதரவில் ஸ்ரீ. உ. வே. T. S. இராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி (B.A, B.L.,) அவர்கள் அக்கிராசனாதிபதியத்தில் ஸ்ரீ.உ. வே. நியாயவேதாந்த வித்வான் ரங்கஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியால் உபந்யசிக்கப்பெற்றது.

என்றும் சொல்லுகிறபடியே ஸ்ரீமந்நாராயணனாகிய பரமாசார்யனால் உபதேசிக்கப்பட்டு வருகிறதென்கின்றனர். அதனால் இந்த மூன்று சமயங்களும் ஸம்ப்ரதாயமென்ற சொல்லாலே வழங்கப் பெறும். நம்பூர்வாசார்யர்கள் இந்த ஔபநிஷத சமயங்களுள் நம் விசிஷ்டாத்வைத சமயத்தைப் பிரிததுணர்த்துவதற்காகவே 'ஸத்' என்ற அடைமொழியிட்டு 'ஸத்ஸம்ப்ரதாயம்' என்று வழங்கினார்கள். ஆதலால் ஸத் என்ற அடைமொழி பிறிதினியையு நீக்கிய விசேஷணமாகும்.

இனி, ஸத்ஸம்ப்ரதாயம் என்ற சொற்பொருள் உரைக்கப் பெறும்:—இது, ஸத என்றும், ஸம்ப்ரதாயம் என்றும் இரண்டு சொற்களாலாகிய ஒரு தொடர்மொழி. ஸம்ப்ரதாயம் எனபதில் ஸம், ப்ர என்ற இரண்டும உபஸர்க்கங்களாம். உபஸர்க்கமானது தாத்வர்த்தத்தை (வினைப்பகுதிப் பொருளை) வேறுபடுத்தும். உதாரணமாக பூ (பூ) என்ற தாதுவிலிருந்து பவதி என்ற சொற் பிறக்கிறது. இதன் பொருள்—இருக்கிறது என்பதாம். இந்தச் சொல்லின்மேல் ஸம் எனற உபஸர்க்கத்தைச் சேர்த்து ஸம்பவதி என்று வழங்கும்போது உண்டாகிறது எனறு பொருள் வேறுபடும. அதுபோல இங்கும் தாயம் என்ற சொற் பொருளை 'ஸம' 'ப்ர' என்ற இரண்டு உபஸர்க்கங்களும் வேறுபடுத்துகின்றன. தாயம்-கொடுப்பது இஙகு யோகரூடியால் (காரண இடுகுறியால) ஞாதியர் ஒருவருக்கொருவர் பங்கிட்டுக்கொடுத்துககொள்வதையே யுணர்த்தும். இனி, 'ப்ர' எனற உபஸர்க்கத்தைச் சேர்த்து ப்ரதாயம் என்று வழங்கினால உஜ்ஜீவன ஹேதுவான உபதேசம் என்ற பொருளைக் குறிப்பிடும. அதன்மேல ஸம் என்ற உபஸர்க்கததைச சேர்த்து வழங்கினால் † ஸமீசீனமான உபதேசம என்ற பொருள் படும். உபதேசத்திற்குச் சமீசீனமாவது—யதாப்ரதிபததியுக்தராய் உபதேசிப்பதும், அங்ஙனமே கேட்டலுமாம். யதாப்ரபததியுக்தராய்க்கொண்டு உபதேசிப்பதாவது.— உபதேசிப்பவன் தனனை ஆசார்யனாக மதித்து உபதேசிக்காமையாம். அங்ஙனமே கேட்டலாவது — உபதேசிப்பவரை உத்தாரகராகக்கொண்டு கேட்டலாம்.

---

† ஸமீசீனம் - பொருத்தமானது.

இனி, 'ஸத்' என்ற பதத்தையுஞ்சேர்த்து ஸத்ஸம்ப்ரதாயம் என்று வழங்கினுல் ப்ராஹ்மத்தை உள்ளபடி யறிந்தவர்களிற் சிரியாரது உபதேசம என்ற பொருள் கிடைக்கும். § ஸத்–ஸாதுக்கள். இங்கு ப்ராஹ்மத்தை யறிந்தவர்களிற் சிறநதவர்களேயே ஸாதுக்களென்று வழங்கலாயிற்று. இந்தப் பிரஹ்மவித்துக்களால் உபதேசிக்கப்பட்ட ப்ரமாணப்ரமேயங்கள் * சீமாபூமியான ப்ரமாணப்ரமேயங்களாம்.

இனி, ப்ரஹ்மத்தையறிந்தவர்களிற் சிறந்தவர் எவரொன்பது ஆராயப்படும்.— ப்ரஹ்மத்தினுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளே உள்ளவாறறிந்தவர்களே பிரஹ்மவித்துக்களிற் சிறந்தவராவார். இறைவனது இயல்புகளை உள்ளவாறறியவேண்டுமாஞல் அவனுல் மயர்வற மதிநலமருளப் பெறவேண்டும். அவ்வாறு பெற்றவர்கள் ஆழ்வார்களேயாவர். "ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்" என்றும், "அறிவாருயிராஞய்" எனறுஞ்சொல்லுகிறபடியே இத்தகைய சிறந்த ஞானிகளேயே ஸர்வேசுவரன் தனக்குயிராக் கருதியிருக்கிறுன். ஆதலால் இவர்களது உக்தியநுஷ்டானங்களே ‡ ப்ரபல ப்ரமாணமென்னத்

---

§ ஸதாம் ப்ரஹ்மவிதாம் ஸம்ப்ரதாய: ஸத்ஸம்ப்ரதாய: என்பது விக்ரஹம்.

* சீமாபூமி–முடிவான எல்லை நிலம். சீமாபூமியான ப்ரமாண ப்ரமேயங்கள்–இவற்றைக்காட்டிலும் சிறந்தது வேறென்றில்லாத ப்ரமாண ப்ரமேயங்களாம்.

‡ "சாஸ்த்ரயோநித்வாத்" என்று ஸூத்ரகாரராகிய வியாசர் ப்ரஹ்மத்தை யறிவதற்கு வேதமே முக்ய ப்ரமாணமாகுமென்றுரைத்தனர். அங்ஙனமிருக்க, இங்குச சிஷ்டாசாரம் ப்ரபல ப்ரமாணமென்றுரைப்பது பொருந்துமோவென்று ஐயமுண்டாகலாம். அதற்குச சமாதானம் வருமாறு காணக—ஆபஸ்தம்பா "தர்மஜ்ஞஸமய: ப்ரமாணம், வேதாஶ்ச" என்று தர்மத்தை நன்கறிந்தவர்களாகிய பெரியோர்களின் கொள்கையே முக்யப்ரமாணமாகுமென்றுரைததனர். வேதமறியாததையும் பிரம்மவித்துக்களாயுள்ளவர்கள் அவனருளால் நன்கறிவார்களென்பதுபற்றி இங்ஙனமுரைத்தனர் போலும். மேலும் வேதமும், தன்னிடத்தில் நம்பிக்கையைத் தெரிவிக்க, "ப்ரஹ்மவாதிநோவதந்தி" என்றுரைத்தது.

தட்டில்லை. சுருதியும் § ப்ரஹ்மத்தை யுள்ளவாறறியாதவனை அசத்தாவனென்றுரைத்து, உள்ளவாறறிந்தவனது பெருமை என்னு முரைப்பதற்கியலாதென்றுரைத்தது. இதனால் இவர்களால் உபதேசிக்கப்பட்டதிலும் சிறந்தது பிறிதொன்றில்லை யென்பது விளங்கும்.

---

§ "அஸந்நேவ ஸ பவதி அஸத் ப்ரஹ்மேதி வேத சேத், அஸ்தி ப்ரஹ்மேதி சேத் வேத ஸந்தமேநம் ததோ விது:" இங்குச் சுருதி, ப்ரஹ்மத்தை யறியாதவன் அசத்தாவான் என்று சம்சாரியை நோக்கிக் கூறவில்லை. கேவலனையும், உபாஸகனையும், ஸ்வார்த்தப்ரபக்னனையும் நோக்கிக் கூறுகிறது. கேவலன், தனக்கோர் சுத்தியுண்டாகவேண்டுமென்று தன்னை ஈசுவரனுக்குச் சரீரமாகக்கொண்டு உபாஸிப்பான். உபாஸகன், சரீரசரீரிபாவத்தை முற்றுமுணராமல் ஸ்தூலாஹங்காரத்தை விட்டு சூக்ஷ்மாஹங்காரத்தை ஒழிக்காதவனாய் ஈசுவரனைப் பிரதானமாகக்கொண்டு ஸத்வித்தை முதலியவைகளிற்கூறிய முறையாக உபாஸிப்பவன். ஸ்வார்த்த ப்ரபக்னன், அநுபவ கைங்கர்யங்களை எல்லைகடந்த ஸ்வாநுபவத்திற்குறுப்பாகக்கருதி பகவத்பக்தியை அநுஷ்டிப்பவன். இந்த மூன்று பேர்களும், அசத்துக்கள் என்று நிந்தித்துக் கழிப்பதற்கு இலக்கானவர்கள். இவர்களைக் காட்டிலும் ப்ரஹ்மத்தையறியாத ஸம்ஸாரியே சிறந்தவனாவான், இவனுக்குக் காலாந்தத்திலாவது ஈசுவரனுகந்த கைங்கர்யமே பரம புருஷார்த்தமெனக்கொள்வதற்கு யோக்யதையுண்டு. இந்த மூன்று பேருக்கும் இவர்களுடைய உபாஸனகாரணமாக இந்த யோக்யதை ஈசுவரனுடைய அழியாத ஸங்கல்பத்தால் அழிந்துவிட்டது.

ஈசுவரன் முகமலர்த்திக்குரிய கைங்கர்யமே பரமபுருஷார்த்தமெனக் கொள்ளும் யோக்யதையை யழித்துக்கொண்டவர்களாதலால் இவர்களுடைய அயோக்யதையை கூறுவதற்கு முன்பே இவர்களை அசத்துக்களென்று ஏசியது. இங்கு ஸ: (அவன்) என்று சேய்மைச்சுட்டாகக் கூறியதால் பரம வைதிககோஷ்டிக்கு இவன் அநர்ஹன் என்பது தெளிவு. அவன் அசத்துத் தானென்று சொல்லாமல் அசத்தாகவே ஆகிறான் என்றுரைத்ததால் ஈசுவரனுடைய நித்ய ஸங்கல்பத்தால் இவனுடைய ஸ்வரூபம் நித்யமாக இருப்பதைக்காட்டிலும் ஸத்தாநாசமே சிறந்ததே; அஃதில்லாமல் போயிற்றே என்று வருந்துவதாகவுந் தோற்றுகிறது. இங்ஙனம் வருந்துவதற்குக் காரணத்தைத் தெரிவிக்கிறது மேலுள்ள பாதம்.—

அஸத் ப்ரஹ்மேதிவேதசேத் – ப்ரஹ்மத்தை அஸத்தென்று உணர்வானாகில்; இங்கு ஆகில் என்பது துர்ப்பலத்தைக் காட்டுகிறது. ஐயார்சண்ட

இத்துணைச் சிறந்ததாகிய ஸத்ஸம்ப்ரதாய தரிசனத்திற்குப் புறம்பாகிய ஐந்து தரிசனத்தவர்களும், *பாஹ்யசமயத்தவர்களும், § ரஹஸ்யகுதிருஷ்டிகளும், ஐஹிக ஆமுஷ்மிகங்களின் பலன்களைப் பெறுதொழிவதோடு கொடுமையான மீழ்ச்சியற்ற தமோலோகத்தை யடைவார்கள். இதற்குப் பிரமாணம ‡ மனுஸ்ம்ருதியிற் காணலாம்.

மடைக்குமாகில் உயிர் போய்விடும் என்பதுபோல ப்ரஹ்மத்தை வித்தோபாயம் என்றுணராமல் அஸத்தாக உணர்வானாகில் அஸத்தாகவே யாகிவிடுவான்; என்றது. அஸத்தாக வுணர்வதாவது – ப்ரஹ்மத்தை உபாயாந்தரங்களாற் பெற நினைத்து உபாஸிப்பதாம். வித்தோபாய நிஷ்டர்கள், அவனாலே அவனைப் பெறவேண்டுமென்று உபாஸிப்பார்கள். இவ்வாறு உபாஸிப்பவர்களின அருமையைத் தெரிவிக்கிறது மூன்றாவது பாதம்.—

அஸ்திப்ரஹ்மேதிசேத்வேத – ப்ராஹ்மத்தை ஸத்தாக அறிந்தானேயாகில், இங்கு, ஆகில் என்றதனால் இவ்வாறு அறிவது அருமை என்பது தெளிவு. கண்ணன கீதையிலும் "கஶ்சிந்மாம்வேத்தி" என்றும், "மாந்து வேத ந கஶ்சந" (ஒருவனும் என்னை யறியமாட்டான்) என்றும் அருளினான். மேலும், "ஸ மஹாத்மா ஸுதுர்லப:" அவ்வாறு அறிகின்றவர்கள் மிகவும் அருமை என்றும் அருளிச்செய்தான்.

இவ்வாறுணர்ந்தவர்கள் பரமவைதிக கோஷ்டிக்கு நடுநாயகமாயிருப்பார்கள். இவர்களது பெருமை என்னால் அளவிட்டுரைப்பதற்கியலாது; பின்னை எவர்தாம் இவர்கள் பெருமையை அறிவாரகளென்பதை நான்காவது பாதம் அறிவிக்கிறது.— "ஏகம்ததோவிது:" இந்த மஹாநுபாவனுடைய பெருமையை யறிவதற்கு வைதிகர்களே உரியவராவர். இந்த மஹாநுபாவனை யென்று அண்மைச்சுட்டாகக் கூறியதினால் இவர்களது பெருமை பிரத்யக்ஷமன்றோ என்பது புலனாகும்.

* பாஹ்ய சமயத்தா – வேதத்தைககொள்ளாத சமணர் முதலான சமயவாதியர்.

§ ரஹஸ்யகுதிருஷ்டி – நமது ஸம்ப்ரதாய விஷயங்களை ஒப்புக்கொண்டு அவற்றிற்கு விபரீதார்த்தங்களைச் சொல்பவர்.

‡ "யா வேதபாஹ்யா: ஸ்ம்ருதயோ யாஶ்ச காஶ்ச குத்ருஷ்டய: ।
ஸர்வாஸ்தா நிஷ்பலா: ப்ரேத்ய தமோநிஷ்டா ஹி தா: ஸ்ம்ருதா:॥

இவர்கள் இங்ஙனம் கதியை யடைதற்குப் பக்திக்கு அநுகூல மாகிய ஜாயமானகாலகடாக்ஷ மில்லாமையே காரணமாகும். ஜாய மான காலகடாக்ஷ மடியாகப் பத்தியில்லாதவர்கட்கு வேதார்த்தம் நன்கு விளங்காதென்பதை † த்ருதராஷ்ட்ர சஞ்சய சம்வாதத்தா லறியலாம். இவ்வர்த்தத்தைப் பாஷ்யகாரரும் மஹாஸித்தாந்த ஆரம்பத்தில், வாசஸ்பதி மிச்சர் முதலானவர்கள் அநேக தரிசனங் களை நிர்வஹித்தனராதலால் சிறந்த மதியுடையவர்கள் என்று பிர ஸித்திபெற்றவர்களா யிருந்தார்களேனும், பகவத் கடாக்ஷமடியாக உண்மையான பக்தி யில்லாததினால் இவர்கட்குச் சாஸ்திரத்தின் உண்மைப்பொருள் விளங்கவில்லையென்று "ஔபநிஷதவாக் யார்த்த வாநீபதா ஹைதுகஸமயவிஷேஷ விரஹிணாம்" என்று அருளிச்செய்தார்.

நமது பூர்வாசார்யர்கள் ஸர்வேசுவரனால் மயர்வறமதிநல மருளப்பெற்றவர்களாகையால் சாஸ்திரத்தின் உண்மைப் பொருள் இவர்கட்குமாத்திரந்தான் புலப்படும். ஆனதுபற்றியே கண்ண னும் அர்ஜுனனுக்கு "திவ்யம்ததாமி" என்றபடி திவ்ய சக்ஷு ஸைக்கொடுத்து, 'இந்த திவ்ய சக்ஷுஸால் உன்னால் பார்க்கப்பட்ட இந்த விச்வரூப தரிசனமானது, எனது கடாக்ஷமில்லாதவர்கள் வேதங்களை அப்யஸித்தாலும், சாந்திராயண முதலிய விரதங்களை யநுஷ்டித்தாலும் அவர்கட்கு நன்றாய்ப்புலப்படாது எனறருளினான்.

---

† ஒருசமயம் த்ருதராஷ்ட்ரன் ஸஞ்சயரைநோக்கி, 'யான் எந்த ஆசிரிய ரிடத்திற் பயின்றேனோ அந்த ஆசிரியரிடத்திலே நீவிரும் என்னுடன் கூடி யிருந்து பயின்றீர். மேலும், அவ்வாசிரியர், அரசனான என்னிடத்திற் பக்ஷ முற்று சிறந்த அர்த்தங்களை எனக்குபதேசித்திருப்பதைக்காட்டிலும், உமக்கு மிகுதியாக ஒன்றுஞ் சொல்லியிருக்கமாட்டாரென்பது தெளிவு. அப்படி யிருக்க, இப்பொழுது உம்மிடத்தில் உபதேசங் கேட்டுக்கொள்ளும்படி என மனம் இருளடைய, உம்முடைய மனம் தெளிவுற்றுமிருப்பதற்குக் காரணம் என்னை?' என்று வினவினன். அப்பொழுது சஞ்சயர், அரசே! எம்பெரு மானுடைய அநுக்ரஹ விசேஷத்தால் என மனம் ஒழுங்கான வழியிலே செல்லுகிறது. அதனால் என் மனந் தெளிவுடையதாயிருக்கிறது; உமக்கஃ தில்லையாதலால் உம்முடைய ஹ்ருதயம் நல்ல வழியிற் செல்லவில்லை. அதனால் அஜ்ஞானமுற்றிருக்கிறது' எனறனர்.

இந்த உட்கருத்தறிந்த ப்ராமாணிகர்களாகிய நமது பூர்வாசார்யர்கள் பரமதநிரசனார்த்தமாக பரசமயத்தை உபந்யஸிப்பதும் தமக்கு அஸஹ்யமாகவேயிருக்குமென்பது மஹா ஸித்தாந்தாரம்பத்தில, "வாங்மநஸவக்ஷதயா உவந்யஸ்ய ரோநேஷ மூளநகாஜி தே வேடா வ்யாரோணாதிள வ்யத் வேஷோ ஹவதி வெஷிகாநாம்" என்ற சுருதப்ரகாசிகையா லறியலாம். ஆதலால் * "புலையறமாகி நின்ற" என்று தொண்டரடிப்பொடியாழ்வார் அருளியதும் இவையுடையதே. இங்கு § ஆழ்வான் ஐதிஹ்யமும் நோக்கத்தக்கதே.

பிறகு, இந்த ஸத்ஸம்ப்ரதாயஸ்தர்களால் உபதேசிக்கப்பட்ட ப்ரமாணம் இரண்டு வகையாம். அவை: உக்திரூபம், அநுஷ்டானரூபமெனபன. உக்திரூபம் மூலம், வியாக்யானமென இரண்டு வகைப்படும். அவற்றுள் மூலரூபம் ரஹஸ்யத்ரய முதலாயின. வியாக்யான ரூபம் - திருவாய்மொழி முதலிய அங்கோ

---

* "புலையறமாகிநின்றபுத்தொடுசமணமெல்லாம்
கலையறக்கற்றமாந்தாகாண்பரோகேட்பரோதான்
தலையறுப்புண்டுஞ்சாகேன்சத்தியங்காண்மினையா,
சிலையினாலிலங்கைசெற்றதேவனேதேவனாவான்"

(இ-ள்.) வேதாதி சாஸ்திரங்களை நன்றாகக் கற்றறிந்த பெரியார் நீசதர்மமாயும் வைதிக தாமதத்திற்கு விரோதமாயுமுள்ள புத்த சமண சமயங்களையும், இவை போன்ற மற்றச சமயங்களையும மனத்தினால் ஆராய்வார்களோ? கேட்பரோ? என் தலையானது அறுப்புண்டாலும் யான் மரிக்கமாட்டேன். பெரியோர்களே! இதனைக் காண்பீராக; வில்லினால் இலங்கையிலுள்ள இராக்கதரை வெற்றிகொண்ட இராமபிரானே யாவராலும் அடையத்தக்க இறைவனாவான்; என்பதாம்.

§ சாக்கியர் சிலர் கூடியிருந்து இஷ்டஸித்தியென்ற தமது நூலைப் படித்துக்கொண்டிருந்தனர். அப்பொழுது கூரத்தாழ்வான் அவர்கள் படித்ததைச் சிறிதுநேரம் கேட்டுக்கொண்டிருந்து தாமதித்துக் காலக்ஷேப கோஷ்டிக்கெழுந்தருளினார். அதுசமயம் உடையவர் தாமதத்திற்குக் காரணமென்னை? என்று ஆழ்வானைக் கேட்டருளியபோது, நிகழ்ந்த செய்தியைத் தெரிவித்தார். உடையவர், "கலையறக்கற்றமாந்தர் காண்பரோ கேட்பரோ" என்றருளிச்செய்து, மறுபடியும் ஆழ்வானை ஸ்நாநம் செய்வித்து ஸ்ரீபாத தூளியுமிடுவித்தருளினார்.

பாங்களோடுகூடிய பிரபந்த சதுஷ்டயமும் அவற்றின் வியாக்யா னங்களுமாம். அநுஷ்டான ரூபம் குருபரம்பரைகளிற் கண்டு கொள்க.

இவர்களா லுபதேசிக்கப்பட்ட ப்ரமாணங்களா லறியப்படும் ப்ரமேயம் மூன்றும். அவை: ஸ்வரூப உபாயம் புருஷார்த்தமென் பன. இவற்றை முறையே ஸ்வஜ்ஞாநம, ப்ராபகஜ்ஞானம, ப்ராப்ய ஜ்ஞாநம் என்பர்கள். ஸ்வஜ்ஞாநமாவது—ஆத்மஜ்ஞாநமாம். ப்ராபக ஜ்ஞாநமாவது—உபாயஜ்ஞாநமாம். ப்ராப்யஜ்ஞாநமாவது—புருஷார் த்த ஜ்ஞாநமாம். ஆத்மஜ்ஞாநமாவது—ஆத்மாவை யுள்ளபடி யறிவ தாம். எந்த வஸ்துவுக்கு எது அசாதாரண தர்மமோ அந்த வஸ்துவை அந்த அசாதாரண தர்மததுடன் அறிவதுதான் உள்ள படியறிவதாம். அப்படியாம்போது ஆத்மாவுக்கு எது அசாதாரண தர்மம் என்று ஆராயும்போது சேஷத்வமே அசாதாரண தர்ம மென்பது விளங்கும். ஆத்மாவுக்கு ஜ்ஞாநாநந்தங்களிருக்கினும் அவை முக்ய லக்ஷணமாக மாட்டா. ஒரு வஸ்து ஜ்ஞாநத்துக்கு விஷயமாம்போது அதன் அசாதாரண தர்மத்துடன் விஷயமாகும். உதாரணமாக, குடம் ஞானத்திற்கு விஷயமாம்போது குடத்வ தர்மத்துடன் விஷயமாகிறது. அதுபோல "யஸ்யாத்மா சரீரம் யஸ்யப்ருதிவீ சரீரம்" என்றபடி ஜீவர்களும் மற்றவைகளும் ஈசுவரனுக்குச் சரீரங்களாதலால் ஞானத்திற்கு ஆத்மா விஷயமாம போது ஈசுவரனுக்குச் சரீரமாயிருக்கிறனென்றே விஷயமாகும். ஆதலால் சேஷத்வமே ஆத்மாவுக்கு முக்ய லக்ஷணமென்பது போதரும். ஸ்ரீபாஷ்யத்திலும் இவ்விஷயத்தைத் தெளிவாக அறிய லாம். அது வருமாறு :—

அந்தர்யாம்யதிகரணத்தில் ஸர்வேசுவரன் எல்லாவற்றிற்கு அந்தராத்மாவாயிருக்கிறனென நிரூபித்து, இங்ஙனம் நிரூபித்த அர்த்தபலத்தாலே சேதனனுக்குச் சேஷத்வபாரதந்த்ர்யமே ஸ்வ ரூபமென றும் ஸ்தாபிக்கலாயிற்று. இரண்டாவது அத்யாயத்தில் ஆத்மஸ்வரூபத்தை நிரூபிக்கவந்தவிடத்தில் ஈசுவரனுக்கு அம்சமாக நிரூபிக்கலாயிற்று. அம்சமாவது-விசிஷ்ட வஸ்துவின் ஏகதேசம். இங்கு ப்ரணவம்போல முன்னர் ஈசுவர ஸ்வரூபமுரைத்துப் பின

னர் ஜீவஸ்வரூபமுரைத்ததாலும் ஜீவனுக்குச் சேஷத்வ ஸ்வரூபமே ஸித்தமென்பது தெளியலாம்.

இரண்டாவது அத்யாயம் மூன்றுவது பாதத்தில் ஆத்மஸ்வரூபம் நிரூபிக்கவந்தவிடத்தில் ஆத்மாதிகரணத்தால் நித்யனென்றும், ஜ்ஞாதிகரணத்தால ஜடமன்று ஜ்ஞாநமாத்ரமென்றும், ஜ்ஞாதாவுமாகிறுனென்றும், ப்'சங்காத் அணுஸ்வரூபனுமாகிறுனென்றும, அடுத்த கர்த்ருவதிகரணத்தால் ஜ்ஞாநமுள்ளவனுதலால் கர்த்தாவாகிறுனென்றும, பராயத்தாவதிகரணத்தால் அந்த கர்த்ருத்வமும் பரனது இச்சாதீனமென்றும், அதறகடுத்த அம்சாதிகரணத்தால் அசேதனத்தைப்போல ஈசுவரனுக்குச் சேஷமாயிருக்கிறுனென்றும் உபஸம்ஹரித் துரைக்கப்பட்டன.

மூன்றுவது அத்யாயம இரண்டாவது பாதம் அகிருண்டலாதிகரணத்தில சேதனனுக்கு முன்னுரைக்கப்பட்ட அபசத்வம்போல அசித வஸ்துக்களுக்கும் அபசத்வமுண்டு என்று நிரூபிக்கப்பட்டது. இதனுல சேதனனுக்கு அசித்வத்பாரதந்தர்யமுண்டென்பது குறிப்பு.

நான்காவது அத்யாயம் நான்காவது பாதத்தில் அபிபாகேநத்ருஷ்டத்வாத்யதிகரணத்தில் பரஞ்சோதியை யடைந்து ஸர்வபந்தங்களினின்றும விடுபட்ட சேதனன் ஸர்வேசுவரனை யநுபவிக்குமிடத்தத் தனனுடைய ஸ்வரூபத்தையறிந்தவனுகையால், அவனைச் சேஷியாகவே அநுபவிக்கின்றுன் என்றுரைக்கப்பட்டது.

இந்த நூல் முதலிறுதிகளில் சரீரசரீரிபாவத்தைத் தெரிவிப்பதே முக்ய நோக்குடையதாயிருப்பதால், இதற்குச் ‡ சாரீரக சாஸ்திரம் என்று பெயர் வழங்கப்பெறும் என்று ஆநந்தமயாதிகரணத்தில் அபியுக்தரான பகவத்போதாயனுதியர் அருளிச்செய்தனரென்று பாஷ்யகாரர் அருளிச்செய்தார்.

மேலும, சேஷத்வமே ஆத்மாவுக்கு அந்தரங்க ஸ்வரூபமென்பது எவ்வாறெனின;— ஸதபாவத்தைபபெற்ற லக்ஷ்ய வஸ்துவுக்கே லக்ஷணுபேக்ஷையுண்டென்பது யாவருக்கும உடன்பாடு. உதாரணமாக, பசுவுக்கு அலைதாடியுடைமையானது பசுத்வ ஸம்பந்தத்தால நிலைபெறுகிறது இவ்வண்ணமிருக்கின்ற அலைதாடியைக் கண்டபிறகு இதற்கு லக்ஷணம் யாது? என்று ஆராய்ச்சியுண்டாகும். அதுபோல ஆத்மாவானவன் பகவத் ஸம்பந்தத்தால நிலைபெறுகிறுன் இங்ஙனம் நிலைபெறுகின்ற இவன எத்தன்மையினன்? என்று ஆராய்ச்சியுண்டாக, ‘ஈசுவரனுக்குச சரீரபூதன்’ என்று

‡ சாரீரகம்—ஜகச்சரீரியான பரமாத்மா சாரீரகன்; அவனைப்பற்றியுரைக்கும நூல் சாரீரகம.

நிச்சயிக்கலாமன்றோ. ஆதலால் ஆத்மாவுக்குச் சேஷத்வமே சிறந்த லக்ஷணமென்பது தெளிவு. இவ்விஷயம், "ஸத்தாயாஃ ஆச்ரய ஸம்பந்தாதீநத்வாத் ஸ்வரூபலாபே ஸதி ஸர்வம் தததீநம்" "ஸத்தாயா: ஆச்ரய ஸம்பந்தாதீநத்வாத் ஸ்வரூபலாபே ஸதி ஸர்வம் தததீநம்" என்ற சுருதப்ரகாசிகையால் நன்கறியலாம்.

ஸ்ரீபாஷ்யத்தில் முதல் அத்யாயத்தில் சேதநாசேதன விலக்ஷணமான ப்ரஹ்மத்தை ஸாதித்துப்பின்னர் ஜகத்காரணத்வ லக்ஷணம் ப்ரஹ்மத்துக்குப்பொருந்துமா? என்று விசாரித்து, மேல மூன்று அத்யாயங்களால் அவ்விஷயம் ஸ்தாபிக்கப்பெற்றுளது.

மேலும், "யஸ்யாத்மாசரீரம" என்று இவ்வதிகரணத்துக்கு விஷயமாக எடுத்துக்கொண்டதில் ஈசுவரனுக்கு ஆத்மா சரீரமென நிருப்பதால், சேஷத்வமே ஆத்மாவுக்குப்பிரதான நிரூபகமெனத் தோற்றுகிறது. ஜீவஸ்வரூபத்தை முடிக்குமிடத்தில் ஆரம்பத்திலுரைத்தபடியே சேஷத்வத்தையே நிரூபித்து, அப்பால் மற்றொரு ஸ்வரூபநிரூபகமான தர்மம் சொல்லப்படவில்லையாதலாலும் சேதனனுக்குச் சேஷத்வமே முக்ய லக்ஷணமென்று ஸ்தாபிக்கப்பட்டதாயிற்று. இனனும், ஸ்ரீபாஷ்யத்தில் முதலில் சேதநாசேதனங்களை ஈசுவரனுக்குச் சரீரமாக விளக்கியுரைக்கவந்த முறையில் ஆத்மாவுக்குச்சேஷத்வத்தை அசாதாரண லக்ஷணமாகச்சொல்லிப் பின்னர் இரண்டாவது அத்யாயத்தில் ஜ்ஞாத்ருத்வாதிகளைச் சொல்லியிருப்பதால் முற்கூறிய சேஷத்வத்தைக்காட்டிலும் ஜ்ஞாத்ருத்வாதிகள் வலியற்றனவெனத் தோற்றுகிறது.

நம் பூர்வாசார்யர்கள, ஸர்வேசுவரனைக் காட்டிலும் சேதனன் வேறுபட்டவனென்றுணர்த்துவதற்குச் சேஷத்வஸ்வரூபமே இவனுக்குரியதென்றுணர்த்தினர்கள். § "அடியேனுள்ளான்" என்று ஆழ்வார் பணித்ததும இங்கு ஆராயத்தக்கது.

---

§ "அடியேனுள்ளானுடலுள்ளானண்டத்தகத்தான்புறத்துள்ளான்
படியேயிதுவென்றுரைக்கலாம்படியனல்லன்பரம்பரன்
கடிசேர்காற்றத்துள்ளாலேயின்பதுன்பக்கழிநேர்மை
ஒடியாவின்பப்பெருமையோனுணர்விலும்பரொருவனே"

என்பதாம இங்கு ஆழ்வார் ஆத்மஸ்வரூபத்தை அருளிச்செய்ய வந்தவிடத்தில் என்னுள்ளான் என்றருளிச்செய்யாமல் அடியேனுள்ளான் என்றதனால் ஆத்மாவுக்குச் சேஷத்வமே அந்தரங்க நிரூபகமே என்பது விளங்கும். இவ்விடத்தில் ஒரு ஐதிஹ்யம் அருளிச்செய்வார்கள். அதுவருமாறு.—"...... ஜ்ஞாநாநந்தங்களும், சேஷத்வமும் ஆத்மாவுக்கு நிரூபமாகச் சொல்லாநின்றது; இதிலே அந்தரங்க நிரூபகமேது ? என்று எம்பெருமானார் திருவோலக்கத்திலே ப்ரஸ்துதமாக ஸர்வஜ்ஞராய் எழுந்தருளியிருக்கச்செய்தேயும், 'இதை ஆசார்யமுகேந வெளியிடவேணும்' என்று பார்த்து, திருக்கோஷ்டியூர்நம்பி சந்நிதிக்கு, 'ஆழ்வான்! இதைப் பெற்றுவாரும்' என்று வரத்

உபாயம்-ஸித்தோபாயம். ஸித்தோபாயமாகிய ஈசுவரனுக்குத் தான் உபாயத்வமுண்டு. இதனை, அதர்மத்தைத் தர்மம் என்று மயங்கின † அர்ச்சுனன் கருத்தால் தெளிவாக அறியலாம். இவ் வர்த்தத்தைப் பாஷ்யகாரரும் பராதிகரணத்தில் "நாயமாத்மா" என்ற சுருதியை எடுத்துக்கொண்டு ஸர்வேசுவரன அநந்யோபாய னுதலால ப்ராபகமும், ப்ராப்யமும் ஒன்றே என்று நிரூபித்தார். அந்தச்சுருதியின் அர்த்தத்தை ஆராயுமிடத்திலும், சிரவண மனன தியானுதிகளாகிய உபாயாந்தரங்களால ஸர்வேசுவரன் பெறுதற் குரியவனல்லன் என்று உரிமையையும் தவிர்த்திருப்பதால ஸர்வேசு வரனுக்கு நைரபேக்ஷ்யமே ஸ்வரூபமென்பது தெளியலாம்.

உபாயாநதரங்கட்கு உபாயதவமில்லையென்பது * ஸ்வநாசத்வ முதலிய பதினைந்து தோஷங்களாலறியலாம். உபாயாந்தரஙகட்கு உபாயத்வ யோக்யதையில்லாததினுலும், இந்த உபாயங்களால அவ னடையப்படுதறகு யோக்யனுகாதிருபபதாலும் அவனே உபாய

• காட்டியருள, அவருமெழுந்தருளி, நமபியை ஸேவித்து இந்த விருத்தாந் தத்தை விண்ணப்பஞ்செய்து ஆறுமாசம் ஸேவித்திருகக, அவரிரங்காமை யாலே, 'எமபெருமானுர ஸந்நிதியிலேபோய் ஸேவித்துவருகிறேன்' என்று போகப்புக, அவரையழைதது 'ஆழ்வான்! மயர்வறமதிநலமருளப்பெறற ஆழ்வார்தாமே, 'அடியேனுள்ளான்' என்றபடி கணடாயே! என்றருளிச் செய்ய, 'க்ருதார்த்த னுனேன' என்று எழுந்தருளினுர் "என்பதாம.

† அர்சசுனன் யுத்தக்களம்புக்கு நின்று. 'நமக்கு உறவினர்களையும், ஆசார்யாகளையும், மற்றுமுளளவர்களையும் கொன்று நாம அரசுரிமையைப் பெறுவதிலும் சும்மாவிருப்பதே நலம்' என்று வில்லைவைத்துவிட்டிருந்தான். அப்பொழுது கணணபிரான், 'க்ஷத்திரியனுயிருப்பவன் யுததகளம் புகுவ னேல தனனேடெதிர்தது நின்றவர் எவரேனும் அவர்களை வெறறிகொள் வது அவனுககுத் தாமமாகும்; இதனையறியாத இவன் அதர்மததைத தர்ம மாகக் கருதி மயஙகுகின்றனனே; எனசெய்வது' என்று கர்ம ஜ்ஞாநபக்தி களை உபதேசிததனன. அர்ச்சுனன இந்த உபாயாந்தரங்களைக கேட்டுப் பரதந்த்ரமாயுள்ள ஆதமாவுக்கு இவையும் விரோதமாமே என்று சோகமுடை யனுயினன. அதல மேல், கணணபிரான ஸிததோபாயததை உபதேசிததான். அதனைககேட்டுத் தெளிந்தான். இதனுல ஈசுவரனுக்குத்தான உபாயத்வ முணடெனபதும். மற்றவைகட்கு உபாயதவமிலலையென்பதும் தெளிவாயின.

* பதினைந்து தோஷங்களாவன.—நாசகத்வம் அயோக்யதவம் துஷ் கரத்வம் அல்பபலத்வம் அந்யஸாத்யத்வம் ... விலம்பித்த பலத்வம் (?)

மென்பது பெறப்படும். இவ்வர்த்தத்தை வேதாந்ததேசிகனும், "ஸ்வயஜிஹகாரண ஸ்ரீ பர வ்ருத்த்யாதி" என்றருளிச் செய்தார்.

இந்த உபாயநிஷ்டனுக்குப் பொருத்தமாகிய புருஷார்த்தமாவது—அநுபவஜநித ப்ரீதிகாரித பரார்த்த கைங்கர்யமாம். இதனால் ஸ்வாநுபவ ஸ்வார்த்த கைங்கர்யங்கள் இவ்விலக்ஷண முமுக்ஷுவுக்குப் பொருந்தமாட்டாவென்பது தெளிவு. பரமாசார்யராகிய ஆழ்வாரும், "எமமாவீடு" என்கிற திருவாய்மொழியில் பரார்த்த கைங்கர்யந்தான் ஸ்வரூபம் என்று நிஷ்கர்ஷித்திருப்பதாலறியலாம். ஆண்டாளும் "உனக்கே நாமாட்செய்வோம்" என்று ப்ராப்யத்தை நிஷ்கரித்தார். இவர்களைப் பின்பற்றிய ஸ்ரீ ஆளவந்தாரும் ஸ்தோத்திரரத்தினத்தில் ப்ராப்ய நிஷ்கர்ஷம் செய்யவந்தவிடத்தில் "ப்ருஹஷயிஷ்யாமி ஸநாத ஜீவிதம்" என்றபடி அவனை யுகப்பிப்பதே புருஷார்த்தமென்று உபதேசித்தார். இவரை அடியொட்டிய எம்பெருமானாரும் "ப்ருஹஷயிஷ்யாமி" என்று தெரிவித்தார். இங்கு, உன்னை அநுபவித்து அடிமை செய்து உகப்பது எக்காலம் என்றருளிச் செய்யாமல் உகப்பிப்பது எக்காலமென்றருளிச்செய்திருப்பதால் நிரூபகனான அதிகாரிக்கு அவனை யுகப்பிப்பதே பரம ப்ரயோஜனமென்று புருஷார்த்த ஸ்வரூபம் வெளியிடப்பட்டது. சுடர்மிகு சுருதியும் ஈச்வரனுக்கு உண்ணுஞ்சோறாகச் சேதனனைச் சொல்லி, இவனை அநுபவித்து மரப்பாவையை யணைவதுபோலாகாமல் எதிர்விழி கொடுப்பது இவனுடைய சைதந்ய பலமாகுமென்றுரைத்து, பிறகு இவனுக்கு உண்ணுஞ்சோறாக ஈச்வரனைச் சொல்லியது. ஆதலால பரார்த்த கைங்கர்யமே பரமபுருஷார்த்தமென்று நிரூபிக்கலாயிற்று.

இதுவரையுமுரைத்தவாற்றால், ஸ்ரீ விசிஷ்டாத்வைத சமயமே ஸத்ஸம்ப்ரதாயம் என்ற பெயரால் வழங்கப்பெறுமென்பதும், அதன் சொற்பொருள் இன்னதென்பதும், ப்ரஹ்மத்தை யுள்ளவாறறிந்தவர்களிற் சிறந்தவர்கள் மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார்களாவார்களென்பதும், இவர்களா லுபதேசிக்கப்பட்டவைகளே தலைசிறந்த ப்ரமாணப்ரமேயங்களாமென்பதும், ப்ரமேயங்கள் மூன்றுவகையான் வகுக்கப்படுமென்பதும், அவற்றின் ஸ்வரூபம் இன்னின்னதென்பதும் பெறப்பட்டன.